## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 132/2014 | Date : 29.08.2023 | DW3 |
|---|---|---|
| Name: நல்லதம்பி | S/o. **செங்கோடன்** | |
| Evidence Recorded Time: 12.16 P.M. to 12.25 P.M | | |

**4, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வழக்கில் உள்ள 2 வது அயிட்ட சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் கோசலை என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். அதன் சர்வே எண், விஸ்தீரணம் என்னவென்றால் சர்வே எண் நினைவில்லை, விஸ்தீரணம் 99 செண்ட் நிலமாகும். நான் கிரையம் வாங்கிய சொத்து கோசலைக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் கோசலைக்கு அவருடைய தாயார் உயில் எழுதி வைத்ததாக சொன்னார். சொத்தை கிரையம் வாங்கும் போது சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் கோசலை பெயரில் இருந்தது. சொத்தை கிரையம் வாங்கிய பின்னர் யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான்தான் அனுபவம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பட்டா கோசலை பெயரில் இருந்த பி.வா.சா.ஆ.2 பட்டா என்றால் சரிதான். கோசலையிடமிருந்து எந்த தேதியில் நான் கிரையம் பெற்றேன் என்றால் 13.07.2011-ல் கிரையம் பெற்றேன். நான் கிரைய பெற்ற பத்திரத்தின் சான்றிட்ட நகல்தான் பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான். சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு சொத்தை பொறுத்து வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. சொத்தை கிரையம் வாங்குவதற்கும் முன்பும், பின்பும் யாராவது சொத்து குறித்து ஆட்சேபனை செய்தார்களா என்றால் இல்லை. சொத்தை வாங்கும் போது கோசலைதான் உண்மையான உரிமையாளர் என்று தெரிந்துதான் வாங்கினேன் என்றால் சரிதான்.

(8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-DW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.